DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)
------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

Calender

Miscellaneous
Priliminary Register

Case No CC 108/14

Sessions

Deposition of witness for

Prosecution PW 2

Defence

Court

Name Ramasamy

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the

day of 20

27.08.2018 முதல் விசாரணை

நான் மீனாட்சி புரத்தில் குடியிருந்து வருகுிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐத் தெரியும் அவரது மகன் எவ்வாற இறந்தார் என்ற விபரம் எனக்குதெரியும். 28.06.2013ம் தேதி காலை 8 மணியளவில் நான், அ.சா1. கரண்ட் பில் கட்டுவதற்காக திருமங்கலத்திற்கு வந்தோம். நாங்கள் டிஎன் 58 இசட் 4627 என்ற பதிவெண் கொண்ட டிவிஎஸ் எக்செல் இரு சக்கர வாகனத்தில் நானும் அ.சா.1ம் வந்தோம். மற்றொரு

வண்டியில் சிலம்பரசன் என்பவரும் ராமநாதன் என்பவரும் வந்தார்கள். அவர்கள் டிஎன் 58 ஒய் 9078 எனற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தில ் வந்தார்கள். 9. 30 மணியளவில் நாங்கள் திரும்ப சென்ற போது நான்கு வழிச்சாலையலி ராஜபாளையம் செல்லும் ரோட்டில்பாலத்திற்கு கீழே தாண்டி செல்லும் போது எங்களை தாண்டி டிஎன் 02 ஏ ஆர் 7531 என்ற பதிவெண் கொண்ட லாரி வேகமாக சென்று ராமநாதன் சிலம்பரசன் சென்ற வாகனத்தின் மீதுமோதியது. எதிரியை எனக்கு தெரியாது. கூட்டமாக நின்றிருந்தார்கள். ராமநாதனை மட்டும் திருமங்கலம்அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். சிலம்பரசன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். சிறிது நேரத்தில் ராமநாதனும் இறந்து விட்டார். இது சம்பந்தமாக அ.சா1. புகார்கொடுத்தார். புகார் மனுவை நான் தான் எழுதிக்கொடுத்தேன். விபத்திற்கு லாரி ஓட்டுனரே காரணம். ஆய்வாளர் என்னை விசாரித்தார். புகாரில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன்.

குறுக்கு விசாரணை: இல்லை.